செய்தி வெளியீடு எண்: 554 நாள் : 03.11.2015

# செய்தி வெளியீடு

ஆந்திர மாநிலம் ஸ்ரீவாரி மெட்டு மற்றும் ஈசகுண்டா பகுதியில் உள்ள சேஷாசல வனப் பகுதியில் செம்மரக் கடத்தல் தடுப்புப் படையினர் 07.04.2015 அன்று அதிகாலை நடத்திய துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் திருவண்ணாமலை, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களைச் சேர்ந்த 20 தமிழர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்த துயரச் சம்பவத்தை அடுத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் ஒரு விரைவான மற்றும் நம்பகமான விசாரணைக்கு ஆணையிடுமாறும், மனித உரிமை மீறல் குற்றம் நிகழ்த்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இறந்தவர் ஒவ்வொருவருடைய குடும்பத்திற்கும் தலா 3 லட்சம் ரூபாய் தமிழக அரசால் வழங்கப்பட்டது.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு, தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு ஏதுவாக அரசு வேலைவாய்ப்பு வழங்குமாறு கோரிக்கை வைத்தனர். உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களில் பெரும்பாலானோர் இளம் விதவைகளாக இருப்பதாலும், அவர்களது ஏழ்மை மற்றும் துயர நிலையைக் கருத்தில் கொண்டும், அந்தக் கோரிக்கையினை பரிவுடனும், கருணையுடனும் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மனுதாரர்களின் தகுதிக்கேற்ப 17 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு சமையல் உதவியாளர் பணியும், 2 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு சத்துணவு ஒருங்கிணைப்பாளர் பணியும் மற்றும் ஒருவரது வாரிசுதாரருக்கு அங்கன்வாடி உதவியாளர் பணியும் வழங்கிட உத்தரவிட்டார்கள். அதன் அடிப்படையில் மேற்கண்ட 20 பேர்களுக்கு பணி நியமன ஆணைகளை 06.08.2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

ஆந்திர மாநில காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு பல தமிழர்கள் ஆந்திர சிறைகளில் உள்ளதை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அவ்வாறு ஆந்திர சிறைகளில் உள்ளவர்களின் விவரங்களை ஆந்திர காவல்துறையினரிடமிருந்து பெறுமாறு காவல் துறை தலைமை இயக்குனர் அவர்களுக்கு உத்தரவிட்டார்கள். அதன்படி ஆந்திர சிறைகளில் உள்ள 516 தமிழர்களின் விவரங்கள் காவல் துறை தலைமை இயக்குனரால் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் 90 நாட்களுக்கு மேலாக சிறையில் வாடும் 516 தமிழர்களை பிணையில் உடனடியாக விடுவிக்கவும், அவர்களது வறிய நிலையை கருத்திற்கொண்டு அவர்களது வழக்கினை நடத்த போதிய இலவச சட்ட உதவிகளை வழங்குமாறும் ஆந்திர பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்களுக்கு 15.10.2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடிதம் ஒன்றை எழுதினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் நடவடிக்கைகள் காரணமாக ஆந்திர சிறைகளிலுள்ள 172 தமிழர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 344 தமிழர்கள் இன்னமும் ஆந்திர சிறைகளில் உள்ளனர்.

ஆந்திர சிறைகளில் உள்ளவர்களின் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து இலவச சட்ட உதவி கோரும் மனுக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி பெறப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட 312 கோரிக்கை மனுக்கள் தலைமைச் செயலர் அவர்களால் 29.10.2015 அன்று தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணையம் மூலம் ஆந்திர மாநில சட்ட உதவி ஆணையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவின்படி ஆந்திர சிறைகளில் உள்ளவர்களை பிணையில் வெளிக்கொணர இரண்டு அரசு வழக்கறிஞர்கள் தலைமையில் வழக்கறிஞர் குழு ஒன்று ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த வழக்கறிஞர் குழு ஆந்திர மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களில் பிணை மனுக்களை தாக்கல் செய்து அவர்களை பிணையில் வெளிக்கொணர தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள். இதற்கான செலவின முன்பணமாக 8 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக ஆந்திர சிறைகளில் உள்ள தமிழர்கள் விரைவில் பிணையில் வெளிவர வழிவகை ஏற்பட்டுள்ளது.

*******

வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்:– **3.11.2015.**